## புள்ளித்திட்டம்

பகுதி I

(விடைக்குறிப்புக்கள் மட்டுமே முழுமையான விடைகள் அல்ல)

**(01)**

| | | | | |
|---|---|---|---|---|
| **1)** 5 | 2) 4 | 3) 1 | 4) 4 | 5) 3 |
| 6) 4 | 7) 5 | 8) 3 | 9) 1 | 10) 5 |
| 11) 5 | 12) 3 | 13) 5 | 14) 2 | 15) 1 |
| 16) 4 | 17) 2 | 18) 4 | 19) 1 | 20) 3 |

(20 புள்ளிகள்)

பகுதி II

(02) அ) சுருக்கம்

- முதலாம் குலோதுங்கன் ஆட்சிக்காலத்திலிருந்து சோழப் பேரரசு மாற்றமடைகிறது.
- இவனுடைய ஆட்சியில் யுத்தங்கள் குறைந்தளவே நடைபெற்றன.
- இவன் நீண்ட காலமாக நாட்டை ஆண்டமையை அறிய முடிகின்றது.
- தன்னை அரசியலில் நிலைப்படுத்திக் கொளவதற்காக மெயக்கீர்த்திகள் எழுதப்பட்டன.
- இவனை அடுத்து ஆட்சி செய்த விக்கிரம சோழனுக்கும் இரண்டு மெயக்கீர்த்திகள் காணப்படுகின்றன.
- புலவர்களின் கவிதைகள் தொடர்ந்து வந்த மரபிலே மெய்கீர்த்திகளும் எழுதப்பட்டுள்ளன என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

உள்ளடக்கம் 08
வெளிப்பாட்டுத்திறன் 05
(08 + 05 = 13 புள்ளிகள்)

ஆ) உரைப்பகுதி

1) பாட்டியினுடைய ஆர்வம் , அபிநயம் , அரவணைப்பு இவைகளோடு முற்றத்து மண்ணும் நிலவும் மரம், செடி, கொடியும் எமது குழந்தை இலக்கியப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கால்களாகும்.
2) தாய்மார்கள் பாடிய பாடல்களை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளும் நாளடைவிலே பாடத் தொடங்குகிறது.
3) ஓசைநயமும் , இலகுவான சொல்லாட்சி , ஆர்வத்தைத் தூண்டும் தன்மை
4) ஆத்தி சூடி, கொன்றை வேந்தன்
5) அகரவரிசையை நினைவுப்படுத்துதல்.
6) அக்காலச் சூழ்நிலை , கல்வி முறை , கற்கத் தொடங்கும் வயதெல்லை

(12 புள்ளிகள்)
(13 + 12 = 25 புள்ளிகள்)

(03) கட்டுரை

அ) மாணவரும் நிகழ்நிலைக் கற்றலும்

அறிமுகம் : இன்றைய அறிவியல் போக்கில் பாரம்பரியக் கற்றல்முறை பல மாற்றங்களை அடைந்துள்ளது. நிகழ்நிலைக் கற்றல் ஊடாக கற்றல் இலகுபடுத்தப்படுவதன் ஊடாகவும் தொழில் நுட்பங்களைக் கற்றலுக்குப் பயன்படுத்துவதன் ஊடாகவும் வினைத்திறனான கற்றலை நோக்கி மாணவர்கள் நகர்கின்றனர்.

வளர்ச்சிப்போக்கு

1. கல்வி கற்பது குழந்தையின் உரிமை இது பல்கலைக்கழகக் கல்வி வரையில் தொடர்கின்றது.
2. வகுப்பறைக் கற்றலுக்குப் புறம்பாக நிகழ்நிலைக்கற்றலும் காலத்தேவை கருதி அறிமுகமானது.
3. இதனால் கற்றலில் தொய்வு ஏற்படாவண்ணம் தொடர்ச்சியை ஏற்படுத்த முடிகின்றது.
4. மரபுவழிக் கற்றலுக்குப் புறம்பாக தொழில்நுட்ப சாதனக்கற்றல் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது.
5. கூடிய விளக்கம், உசாத்துணைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. அறிவுப் பரவலாக்கம் இடம்பெறுகின்றது.
7. தூரதேசங்களில் உள்ள துறைசார்ந்தோரின் அனுபவங்களை இதனூடாகப் பெறக்கூடியதாக உள்ளது.

நன்மைகள் இருந்தாலும் தீமைகளும் உள்ளன.

கவனக் கலைப்பு ஏற்படுதல், இணையத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், நேரவிரயம், ஒழுக்கப் பிறழ்வு என்பவற்றுக்கும் வாய்ப்புள்ளது.

முடிவுரை:

இடர்க்காலங்களில் பயனுள்ள வகையில் செலவழிப்பதற்கும் துறைசார்ந்தோரின் அனுபவங்களைப் பெறுவதற்கும் விளங்கங்களுடன் கூடிய கற்றலுக்கும் நிகழ்நிலைக்கற்றல் பயன்தரக்கூடியது.
தற்காலத்தில் நிகழ்நிலைக் கற்றலுடன் மாணவர்கள் பின்னிப் பிணைந்துள்ளனர்.

ஆ) உணவுப்பழக்கவழக்கமும் ஆரோக்கியமும்

முகவுரை : மனிதனின் அன்றாடக் கடமைகளுக்கும் எதிர்கால வாழ்வுக்கும் ஆரோக்கியம் அவசியம். அதற்கு உணவுப் பழக்க வழக்கம் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

வளர்ச்சி :

- கல்விச் செல்வம், பொருட்செல்வத்தைப் போல உடல் ஆரோக்கியமும் அவசியமானது.
- உணவுப் பழக்க வழக்கம் இன்றைய மனிதர்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதால் தொற்றா நோய்களும் அதிகரித்துள்ளன.
- பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கத்தை கைவிட்டதனால் உடல் ஆரோக்கியம் கெடுவதற்கு ஏதுவான நிலை ஏற்பட்டுள்ளது.
- ஆரோக்கியம் கெடுவதற்கான காரணங்கள்
    - உடற்பருமன்
    - உடற்பயிற்சியின்மை
    - ஆரோக்கியமான சூழலின்மை
    - உணவுகளில் இரசாயனப் பதார்த்தங்கள் கலத்தல்.
- தவிர்க்கக் கூடிய வழிகள் பற்றி ஆராய்தல்.
    - சத்துள்ள உணவுகள் உட்கொள்ளல்.
    - பாரம்பரிய உணவுகளை அதிகரித்தல்
    - உடற்பயிற்சியினை மேற்கொள்ளுதல்.
    - பொழுதுபோக்கு அம்சங்கள்
    - விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்.

முடிவுரை : தனிமனித ஆரோக்கியத்தைப் பேணுவதனூடாக வாழ்க்கையை முன்னேற்றலாம். சமுகத்திற்கும் நாட்டுக்கும் சேவை செய்யலாம்.

இ) பேராசிரியர் கா.சிவதம்பியின் தமிழ்ப்பணிகள்

- பிறப்பு : 1932.மே.10, கரவெட்டி, யாழ்ப்பாணம்.
- கல்வி : கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, ஷாஹிராக் கல்லூரி ஆகியவற்றில் பாடசாலைக் கல்வியையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் BA , MA ஆகிய பட்டங்களையும் பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் PHD பட்டத்தையும் பெற்றார்.
- பணி : ஈழத்து தமிழ் அறிஞர், ஆசிரியர், எழுத்தாளர், பண்பாட்டு வரலாற்று ஆசிரியர், ஆய்வாளர், விமர்சகர்.
- ஈடுபட்ட துறைகள் : மொழியியல், இலக்கியம், சமூகவியல், மானுடவியல், அரசியல், வரலாறு என மாக்சியப் பின்னணியில் விமர்சனத் துறையை வளர்த்தெடுத்தார்.

- எழுதிய நூல்களில் முக்கியமானவை :
    - இலக்கியத்தில் முற்போக்கு வாதம் -1977
    - இலக்கியமும் கருத்துநிலையும் - 1982
    - தமிழில் இலக்கிய வரலாறு
    - நாவலும் வாழ்க்கையும் - 1978
    - மதமும் கவிதையும்
    - பண்டைத் தமிழர் சமூகம்
    - தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
    - தமிழ் இலக்கியத்தில் மதமம் மானுடமும் முதலான சில

- பதிப்புப்பணி : இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் - 1980
  மார்க்கண்டன் வாளவிமான் நாடகம் - 1968

- ஏனையவை : அரசியல், நாடக, இலக்கிய வாழ்க்கை
  வரலாற்று ஆய்வுகள், அமைப்பு சார்ந்த பணிகள்,விருதுகள்,விமர்சனப் பங்களிப்பு முதலானவை குறித்து தனித்தனியாக விரிவாக நோக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) புவி வெப்பமடைதலும் அதன் பாதிப்புக்களும்

அறிமுகம் :
பருவநிலை மாற்றம், மனித செயற்பாடுகள், சூழலியற் பிரச்சினைகள் காரணமாக புவி வெப்பமடைதல் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

வளர்ச்சி :
- புவியின் மேற்பரப்பு வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து வருதல் புவி சூடாதல் என்பர். 1850இன் பின்னர் புவியின் மேற்பரப்பு சராசரி வெப்பநிலை 10 பாகை செல்சியஸ் அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.
- இதனால் காபனீரொட்சைட்டின் செறிவும் அதிகரித்திருக்கிறது.
- கடல் மட்ட அளவு உயர்தல், வடதுருவப் பனியளவு குறைதல் ஆகியவற்றால் சூழலில் பாதிப்பு ஏற்படுகின்றது.
- காபனீரொட்சைட் மற்றும் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பு இவற்றுக்குக் காரணங்களாகும். இவற்றுக்கு மனித செயற்பாடுகளும் காரணங்களாக அமைந்துள்ளன.
- பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனை, கரியமிலவாயு அதிக வெளியேற்றம்

பாதிப்புகள்:
- மழைவீழ்ச்சி குறைவடைதல் அதனால் வறட்சி ஏற்படுதல், நிலங்கள் மழைநீரை உள்வாங்காத நிலையில் கடலில் கலத்தல், குளங்கள் நீர் நிலைகள் வறட்சியடைதல்.
- வெப்பமண்டலப் புயல்கள் அதிக அளவில் ஏற்படுதல்.
- கடல் மட்ட அதிகரிப்பு வெப்ப அதிகரிப்பால் மக்கள் நோய்களை எதிர்நோக்குதல். (உதாரணம் தோல் சார்ந்த நோய்கள்)
- உயிரினங்களின் பாதிப்பு (கடல்வாழ், ஏனையவை)
- நீருக்கான தேவை அதிகரிக்கும்.

முடிவுரை :
- மரங்களை வளர்த்தல், பொலித்தீன் பாவனையைக் குறைத்தல், சூழல் நேயம் சார்ந்த வேலைத்திட்டங்கள் மூலம் விளைவுகளைக் குறைக்க முடியும்.

உ) ஊருடன் கூடி வாழ்

அறிமுகம்
மனிதர்கள் தமது வாழ்வில் வெற்றியடைய வேண்டுமானால் தான் சார்ந்த சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கூடி வாழ்வதன் ஊடாகவே முன்னேற்றத்தை அடைய முடியும் .தனி மனிதர்களாக ஒதுங்கியிருப்பதனூடாக சமூகத்தின் பங்காளியாக முடியாது.

வளர்ச்சி
- பண்டைய வாழ்வு குலக்குரு வாழ்வு வேட்டைச் சமூகமாக இருந்து வளர்ச்சி பெற்றது.
- ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து விட்டுக் கொடுத்து வாழ வேண்டியுள்ளது.
- ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து விட்டுக் கொடுத்து வாழ வேண்டியுள்ளது.
- சமூகத்தில் இருந்தே மனிதன் எல்லாவற்றையும் கற்றுக் கொள்கின்றான்.
- சமூக வாழ்வில் உணவுக்கும் ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கும் கூடி வாழ வேண்டியுள்ளது.
- பண்பாட்டு வாழ்வு என்பது குழுவாக வாழ்வதன் ஊடாகவே வருகிறது.
- கல்வி,பொருளாதாரம்,மொழி,சமயம், உறவுநிலைகள்,சடங்குகள் முதலியன கூட்டுவாழ்வின் ஊடாகவே கிடைக்கின்றன.
- தனிமனித ஆளுமைகள் ,பண்பாட்டு அம்சங்கள்,வெற்றித் தோல்விகள் ,உடல் உள ஆரோக்கியம்முதலானவையும் ஊருடன் கூடி வாழ்வதன் ஊடாகவே வருகின்றன.

முடிவுரை:
எனவே சமூக பொருளாதார பண்பாட்டு வாழ்வை ஊருடன் கூடி வாழ்வதன் ஊடாக மனிதன் பெற்றுக் கொள்கிறான்.

(25 புள்ளிகள்) (பொருள் - 12, அளவும் அமைப்பும் - 8, மொழிநடை – 5)

(04) அ)

1. பரணி – கலிங்கத்துப்பரணி, தக்கையாகப்பரணி
2. உலா - மூவருலா
3. அந்தாதி – திருத்தொண்டர் திருவந்தாதி, சடகோபர் அந்தாதி
4. நளவெண்பா
5. ஏரெழுபது, ஈட்டி எழுபது
6. பிள்ளைத் தமிழ் - குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்

ஆ)

- பரணி என்பது ஆயிரம் யானைகளை அமரிடை வென்ற வீரனைப்பாடுவதாகும்.
- இது 96 வகை பிரபந்தங்களுள் ஒன்று
- இது ஒரு சிற்றிலக்கிய வடிவமாகும்.
- சோழர் பெருமன்னர் காலத்தில் பல்வேறு புலவர்கள் பரணி சார்ந்த இலக்கிய வடிவங்களை பாடியுள்ளனர்.
- சோழர் காலத்துக்கு உரியவை (சயங்கொண்டார் - கலிங்கத்துபரணி, ஓட்டக்கூத்தார் - தக்கையாக்கப்பரணி)
- கலிங்கத்துப்பரணி முதலாம் குலோத்துங்க சோழன் கலிங்கத்தை வென்ற போரைப் பற்றி பாடிய நூலாகும்.
- தக்கையாக்கப் பரணியானது சிவனுடைய மூர்த்தங்களில் ஒன்றாகிய வீர பத்திரக் கடவுள், தக்கனின் யாகத்தால் தோன்றி அந்த யாகத்தை அழித்த வரலாற்றை கூறுவதாகும்.
- இக்காலத்தில் மன்னர் புகழ் பாடப்படுவதோடு சமயம் சார்ந்த செய்திகளையும் பரணி இலக்கியம் எமக்கு அறிவிக்கின்றது.

இ)

- பல்லவர் கால பக்தி இலக்கியம் - சோழர் காலத்தில் காவியங்கள் தோன்ற அடிப்படையாக அமைந்தமை.
- பெரிய புராணம் சோழர் காலத்தில் தோன்றிய மாபெரும் காவியமாக காணப்படுகின்றது. இதனை ''புராண காவியம்'' எனக் கூறுவோரும் உளர்.
- பல்லவர் காலத்தில் பாடப்பட்ட இறை பக்தி இந்நூலில் அடியவர் பக்தியாக மாறியுள்ளது. உ-ம்: சேக்கிழார், நாயன்மார், சிவன் மீது கொண்ட அன்பு காணப்புடுகின்றது.
- இராமன் மீது கம்பர் கொண்ட பக்தியின் வெளிப்பாடே கம்பராமாயணமாகும். இது பல்லவர் கால வைணவ ஆழ்வார்களின் பக்தியின் வளர்ச்சியை காட்டுகின்றது.
- இராமயணத்தில் வரும் அணிலின் கதை பல்லவர் பாலத்தை தழுவியது.

(05 × 03 = 15 புள்ளிகள்)

(05) அ)

1. பரணி – பாசவதைப்பரணி, மோகவதைப்பரணி, அஞ்சைவதைப் பரணி
2. உலா – திருவாரூர் உலா, திருகாளத்தி நாதர் உலா, ஏகாம்பர் நாதர் உலா மதுரைச்சொக்க நாதர் உலா
3. கலம்பகம் - காசி கலம்பகம், கச்சி கலம்பகம்
4. பிள்ளைத்தமிழ் - மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்
5. மும்மணிக்கோவை – பண்டார மும்மணிக்கோவை
6. நான்மணிமாலை – நால்வர் நான்மணிமாலை
7. தூது – சிவஞானபாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது

ஆ) நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்கள்

- சிற்றிலக்கியம் தோன்றக்கூடிய சூழல்
- சோழர் காலத்தில் பேரிலக்கியம் பெற்ற இடத்தை நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பெற்றமை.
- நாயக்கர் கால ஆட்சி திறன் புலவர்களை கவராமை.
- புலவர்களுக்கு ஏற்பட்ட வறுமை
- காவிய இலக்கிய வீழ்ச்சி
- நீண்ட இலக்கியங்களை மக்கள் விரும்பாமை
- புலவர்களின் வித்துவ செருக்கு
- அடிநிலை மக்கள் இலக்கியங்கள் படைத்தமை.

இ) காளமேகப் புலவரின் கவியாற்றல்

- விஜயநகர நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்.
- வசைப்பாடுவதில் வல்லவர் “ வசைப்பாடக் காளமேக...”
- வாழ்க்கையின் நிலையாமை பற்றி பல பாடல்களை பாடியுள்ளார்.
- சிலேடைப் பாடுவதில் வல்லவர்.
- சொல்லணிகளை கையாண்டுள்ளார்.

(05 × 03 = 15 புள்ளிகள்)

06) அ) 1. புராணம் - திருவாக்குப் புராணம், முகைதீன் புராணம்
2. கலம்பகம் - மறைசை கலம்பகம்
3. கோவை – அருளம்பலக் கோவை
4. குறவஞ்சி – நகுலமலைக் குறவஞ்சி
5. கும்மி – ஞான அகிதாக் கும்மி
6. தூது – நல்லூர் கந்தசுவாமி கிள்ளைவிடுதூது
7. பிள்ளைத்தமிழ் - செல்வச்சந்நிதி பிள்ளைத்தமிழ்

ஆ)
- பழைய இலக்கிய வடிவங்கள் பயன்படுத்தப்பட்டமை உ–ம் : கும்மி , தூது , பதிகம்
- பழைய வடிவத்தில் புதிய பாடுபொருள் பயன்படுத்தப்பட்டமை.
  உ–ம் : கனகி புராணம், கோட்டுப் புராணம்
- சமயம் சார்ந்த , தனிநபர் சார்ந்த பாடுபொருள்கள் பயன்படுத்தப்பட்டமை
  உ–ம் : சைவமதச்சார்பு, இஸ்லாமிய மதச்சார்பு
- சோதிடவினாவிடை , சோதிடமாலை ,சோதிடநூல்கள் எழுதும் முயற்சி
- பதிப்பு முயற்சி
- மொழிபெயர்ப்பு

இ) இலங்கையில் அகராதிகள் தோன்றி வளர்ந்தமாற்றை எடுத்துக்காட்டுக.

- அகராதி ஆக்கக் குழு உ–ம் : யாழ்ப்பாண அகராதி
- பன்முக அகராதி முயற்சிகள் உ–ம் : தமிழ் - தமிழ், தமிழ் - ஆங்கிலம்
- அகராதி முயற்சியில் பல அறிஞர்கள் ஈடுப்பட்டமை
  உ–ம் : நா.கதிரைவேற்பிள்ளை, வை.கதிரைவேற்பிள்ளை
- முக்கியமான அகராதிகள்
  உ–ம் : தமிழ்ப்பேரகராதி, யாழ்ப்பாண அகராதி

(05 × 03 = 15 புள்ளிகள்)

(07) அ)

- 20ஆம் நூற்றாண்டில் ஆரம்பக்காலம் முதல் ஈழத்து தமிழ் இலக்கிய விமர்சனமானது பல்வேறு வளர்ச்சிகளை கண்டுவந்துள்ளது.
- இரசனை முறை திறனாய்வின் தொடர்ச்சியை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ,போ.கிருஸ்ணபிள்ளை,
- க.கோ.இரத்தினம் முதலியோரிடம் காணலாம்.
- 1940 களிலிருந்து நவீன இலக்கிய விமர்சனம் வளர்ச்சிப்பெற்றது.
- இலங்கைப் பல்கலைக்கழக வழி வந்த விமர்சகர்களின் விமர்சன முயற்சி
- முற்போக்கு இலக்கிய விமர்சன நெறி
- 1960 களில் முற்போக்கு நெறி செல்லாத விமர்சகர்களின் பணிகள்
- முற்போக்கு வாதத்தை விமர்சன ரீதியாக எடுத்து விளக்கிய கர்த்தாக்கள்
  உ-ம்: டொமினிக் ஜீவா , இளங்கீரன்
- முற்போக்கு வாதத்தை எதிர்த்த இலக்கிய விமர்சகர்கள்
  உ-ம்: எஸ்.போவின் நற்போக்குவாதம்
- 1960 களில் புனைகதை இலக்கியம் தொடர்பான சர்ச்சைகள்
- 1970,1980 களில் இலக்கியத்தின் அழகியல் தொடர்பான சர்ச்சைகள்
- கல்வி பயிற்சி வழியான விமர்சன ஆய்வாளர்களின் பங்களிப்புகள்
  உ-ம்: அ.சிவநேசச்செல்வன் , சண்முகலிங்கம்

ஆ)

- 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இசை நாடகக் குழுக்களின் செயற்பாடுகள்
  நாடக சபைகளின் உருவாக்கம் இசை நாடக மரபின் தொடர்ச்சி
- கலையரசு க.சொர்ணலிங்கத்தின் பங்களிப்பு
- பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் ஏற்படுத்திய தாக்கம்.
- பேராசிரியர் சு.வித்தியனந்தனின் நவீனப்படுத்தல்.
- 1960 களில் பழைய கூத்து வடிவில் புதிய உள்ளடக்கம்
  உ-ம்: பேராசிரியர் மௌனகுருவின் சங்காரம்
- பா நாடகங்களின் வளர்ச்சி
  உ-ம்: நா.சுந்தரலிங்கம் - முருகையனின் கடுழியம்
- 1970 இல் அரங்க வளர்ச்சி, பரிசோதனை முயற்சிகள், பிறமொழி நாடகத் தழுவல்கள்
- வீதி, சிறுவர் நாடகங்கள்.
- மொழிப்பெயர்ப்பு நாடகங்கள்.

இ)

- தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வடமொழியையும் நன்கு அறிந்தவர்.
- அவரது ஒழுக்க ஆசாரத்திற்கு எடுத்துக்காட்டாக நகுலேஸ்வர ஊஞ்சல், சாணக்கிய நீதி வெண்பா போன்றவற்றை குறிப்பிடலாம்.
- அவரது உரை கூறும் திறனுக்கு திருக்கரைசை புராணப் பொழிப்புரை, மறைசை அந்தாதி அரும்பத உரை போன்றவற்றை குறிப்பிடலாம்.
- அவர் எழுதிய வசன நூல்களாவன : கண்ணகி கதை, தமிழ்ப்புலவர் சரித்திரம்
- அவர் எழுதிய கட்டுரைகள் : உதய தாரகை, செந்தமிழ் போன்றவற்றை குறிப்பிடலாம்.
- தமிழ் இலக்கணம், யாப்பு போன்றவற்றில் ஈடுபாடுடையவர் : தண்டியலங்காரப் பொழிப்புரை, அகப் பொருள் பொழிப்புரை
- அவரது மாணவர்கள்: வித்துவான் கணேசையர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

(05 × 03 = 15 புள்ளிகள்)

(08) அ)

1) அந்த வீட்டின் நாற்பது வயதைக் கடந்த பெண்மணி வாசலில் கோலமிட்டாள்

2) கால வழு
பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தைத் திறந்து வைப்பதற்காகக் கல்வியமைச்சர் நாளை வருவார். எனும் தகவலை அதிபர் காலைப் பிரார்த்தனையில் அறிவித்தார்.

3) மலிங்கா பந்து வீச சங்கக்காரா துடுப்பெடுத்தாட ஜெயவர்த்தன பிடியெடுத்தார்.

4) இடைச்சொல் - தான் - தேற்றப் பொருள்
ஆல் - கருவிப் பொருள்

5) 1. கோபித்துவிட்டான்
2. பயற்றங்காய்

(02 × 05 = 10 புள்ளிகள்)

ஆ)

1) ஓரெழுத்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட ஒலிக்குமாயின் அவ்வெழுத்து மாற்றொலியனாகும். சொற்களின் அமைவிடம் நோக்கி வேறுபட்டு ஒலிப்பது மாற்றொலியன்களாகும். வல்லின மெய்கள் ஆறும் மாற்றொலியன்களாக வரும்.

உதாரணம் : கடல், முகம், தங்கம் - க் + அ

இவ் உதாரணங்களில் கடல் என்ற சொல்லில் “க்” என்ற எழுத்து k போலவும் முகம் என்ற சொல்லில் “க்” என்ற எழுத்து “h” போலவும் தங்கம் என்ற சொல்லில் “க்” என்ற எழுத்து g போலவும் ஒலித்துள்ளது. இதே போல ஆறு வல்லின மெய் எழுத்துக்களும் மாற்றொலியனாக வரும்.

2) வேற்றுமை புணர்ச்சி , அல்வழிப்புணர்ச்சி

வேற்றுமை புணர்ச்சி என்பது வேற்றுமைப் பொருளில் வரும் புணர்ச்சியாகும். இங்கு வேற்றுமை எனப்படுவது எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை தவிர்ந்த ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டும் மறைந்தும் வர சொற்கள் புணர்வது வேற்றுமை புணர்ச்சி எனப்படும்.

அல்வழிப்புணர்ச்சி என்பது வேற்றுமை அல்லாத இலக்கணக் கூறுகளுக்கு இடையே நடைபெறும் புணர்ச்சியாகும். இதன் கண் எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை, பெயரெச்சம், உம்மைத்தொடர், தொகைநிலைத் தொடர், தொகா நிலைத்தொடர் போன்ற இலக்கணக் கூறுகள் அடங்கும்.

உதாரணம் : பெய் மழை
குருவி பறந்தது
நெஞ்சே நினை

3) கூட்டுவாக்கியம்

இரண்டு அல்லது பல சமநிலை வாக்கியத் தொடர்கள் இணைக்கப்படும் போது உருவாகுவது கூட்டுவாக்கியமாகும். இதனை சமநிலை வாக்கியத் தொடர் அல்லது தனிநிலை வாக்கியத் தொடர் எனவும் அழைப்பர். இங்கு தொடர்கள் சமநிலையாகக் காணப்படும் ஒன்றில் ஒன்று தங்கியிராது.

இச்சமநிலைத் தொடர்களை இணைப்பதற்கு இணைப்பிடைச் சொற்கள் எச்சங்கள் பயன்படுத்தப்படும்

உதாரணம் : நான் பாட்டுப் பாடினேன்.
கமலன் பாட்டுப் பாடினான்.
நானும் கமலனும் பாட்டுப் பாடினோம்.

மேலே இரண்டு சமநிலைத் தொடர்கள் இணைக்கப்பட்டு கூட்டுவாக்கியம் உருவானவை விளக்கப்பட்டுள்ளது.

(05 புள்ளிகள்)